அன்னையர் தினக் கவிதை : குடியிருந்த கோவில் !

Written by - மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா, மெல்பேண், அவுஸ்திரேலியா -
Saturday, 11 May 2019 07:59 - Last Updated Saturday, 11 May 2019 08:01

கருவறையில் குடியிருத்தி
குருதிதனைப் பாலாக்கி
பெற்றெடுக்கும் காலம் வரை
தன் விருப்பம் பாராது
கருவளரக் கருத்துடனே
காத்திருக்கும் திருவடிவம்
உண்டென்றால் உலகினிலே
உண்மையிலே தாயன்றோ !

குடியிருந்த கோவிலதை
கூடவே வைத்திருந்தும்
கோடிகொண்டு கோவில் கட்டி
குடமுழுக்கும் செய்கின்றோம்
கருவறையை தாங்கிநிற்கும்
கற்கோயில் நாடுகிறோம்
அருகிருக்கும் கோவிலாம்
அம்மாவை மறக்கலாமா !

அன்னதானம் செய்கின்றோம்
அறப்பணிகள் ஆற்றுகிறோம்
ஆத்ம திருப்தியுடன்
அநேகம்பேர் செய்வதில்லை
தம்பெருமை தம்புகளை
தானதனில் காட்டுகிறார்
தாயவளைத் தாங்கிநிற்க
தானவரும் நினைப்பதில்லை !

பெற்றவளைப் பேணிடுவார்
பெரும்பேறு பெற்றிடுவார்
நற்றவமே தாயெனவே
நமக்குவந்து வாய்த்துளது
இப்புவியில் எம்மருகில்

1 / 2

அன்னையர் தினக் கவிதை : குடியிருந்த கோவில் !

Written by - மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா, மெல்பேண், அவுஸ்திரேலியா -
Saturday, 11 May 2019 07:59 - Last Updated Saturday, 11 May 2019 08:01

இருக்கின்ற கோவிலாம்
எம்தாயை என்னாளும்
இதயமதில் வைத்திடுவோம் !

jeyaramiyer@yahoo.com.au

2 / 2